வலயக்கல்விஅலுவலகம் - திருக்கோணமலை

நான்குவருடநடுத்தரக்காலஅபிவிருத்திநிகழ்ச்சித்திட்டம் - தரம்2345(4Y-MTDP-G2345)

இன் கீழ் முன்னெடுக்கப்படும்

கொவிட்-19 காலமாற்றுஉபாயக்கல்விச் செயற்றிட்டம் -III (COVID- PASEP-III)

மாதிரிப் பரீட்சை 04 – 2021 (15.10.2021)

வினாத்தாள் - II

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

சுட்டெண் : .....

நேரம்: 1மணித்தியாலம் 15 நிமிடம்

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒருதாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
இரண்டாவதுபரீட்சகர் முதலாவது பரீட்கரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளி சரியாகும்.	

www.ikedu.lk

01. பின்வரும் பந்தியைத் துணையாகக் கொண்டு வினவப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

1. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் யாவர்? .....
2. இங்கு கீழ்க்கால் விசிறி வந்த சொல் யாது? .....
3. பந்தியிலுள்ள அடுக்குமொழிச் சொல்லை எழுதுக? .....
4. "அங்காடி" என்பதன் ஒத்த சொல்? .....
5. "விரைகின்றனர்" என்பதன் இறந்தகால வடிவத்தை எழுதுக? .....
6. இங்கு வந்துள்ள காலப்பெயரைக் குறிப்பிடுக? .....

02. பின்வரும் மரபுத்தொடருக்குரிய கருத்தை எழுதுக.

1. முன்னுக்கு வருதல் - .....
2. தலை கவிழ்தல் - .....

03. கீழ்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

1. குற்றமுள்ள - .....
2. ஆற்றிலே போட்டாலும் - .....

04. தொடர்மொழிக்கு ஒருமொழியை எழுதுக.

1. ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து - .....
2. பகையரசருக்குக் கொடுக்கப்படும் திறைப் பொருள் - .....

05. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்க

1. விண்களம் 2. விண்கலம் 3. வின்கலம் 4. வின்களம்
2. தொளிலாழர் 2. தொழிலாளர் 3.தொழிளாலர் 4. தொலிழாளர்

06. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. 'இலைகள் கீழே விழுந்தன.' எனும் வாக்கியம்
   (i) உயர்திணை பன்மை படர்க்கை வாக்கியம்
   (ii) அ.ஃறிணை பன்மை முன்னிலை வாக்கியம்
   (iii)அ.ஃறிணை பன்மை படர்க்கை வாக்கியம்
2. 'சிறுவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்.' என்பது,
   (i) உயர்திணை பலர்பால் நிகழ்காலம்
   (ii) உயர்திணை பலவின்பால் இறந்தகாலம்
   (iii)உயர்திணை பலர்பால் இறந்தகாலம்

07. கீழ்வரும் சொற்களின் மரபுப்பெயர்களை எழுதுக.

1. யானை - களிறு என்பது போல நண்டு - .....
2. வேம்பு - கன்று போல நெல் - .....

08. பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

1. மூலை .....
2. ..... புகழும்

www.lkedu.lk

சுட்டெண் : .....

09. பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்தெழுதுக.

1. இ.பெ.கூ - .....
2. இ.ம.வ - .....

10. கீழ்வரும் பாடலடியைப் பூர்த்தி செய்க.

வானுங் கடலாக மாறுதம்மா - இந்த

.....

11. 1. தெற்கு + மேற்கு எனும் சொல்லைச் சேர்த்தெழுதுக. - .....

2. தேங்காய் எனும் சொல்லைப் பிரித்தெழுதுக. - .....

12. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

- மனைவியார் நம்முடைய புதல்வன் சின்னத்தம்பியே ஏதோ எழுதினான் என்று கூறினார்

13. கீழ்வரும் படங்களுக்குரிய பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.



1. .....



2. .....

14. ஆங்கில வாக்கியங்களுக்குரிய தமிழ்க்கருத்தை எழுதுக.

1. I will go to the school - .....
2. I am drinking water - .....

15. பின்வரும் படங்களுக்குரிய சிங்களப்பெயர்களை தமிழில் எழுதுக.



1. .....



2. .....

16. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

- மே ம(G)கே பென்சல -.....

17. "வீதி விபத்துக்களைக் குறைப்பதற்குப் பின்பற்ற வேண்டியவை" எனும் தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாது பொருத்தமான எழுவாய் பயனிலையைக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....

www.ikeu.lk

- **மிகச் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


18. 2 000 + 0 + 40 + 6 என விரித்து எழுதப்பட்ட எண்ணின் எண்பெயரை எழுதுக.

……

19. 6 720, 7 026, 6 027 ஆகிய எண்களை இறங்குவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் எண் யாது?

……

20. கீழே தரப்பட்டுள்ள எண்சக்கரமொன்றில் 6 எண்கள் உள்ளன.



(i) எண்சக்கரத்தை இரு தடவை சுழற்றி இரு எண்கள் பெறப்பட்டன. அவற்றின் கூட்டுத்தொகை 1 456 எனின், அவ்விரு எண்களும் எவை?

……

(ii) அவ்விரு எண்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

……

21. கீழே தரப்பட்டுள்ள எண்களில் ஓர் எண்ணை நீக்கும் போது எண்கோலம் ஒன்றை உருவாக்க முடியும். எனின், அவ்வாறு நீக்க வேண்டிய எண் யாது?

- 18, 21, 23, 24, 27, 30 ……

22. ஒருவருக்கு 3 கொய்யாப்பழங்கள் வீதம் 102 கொய்யாப்பழங்களை எத்தனை பேருக்குப் பகிர்ந்தளிக்கலாம்? ……

23. 24 மாம்பழங்களில் $\frac{3}{4}$ பங்கு மாம்பழங்கள் எத்தனை? ……

24. மணித்தியாலமுள் இரு சுற்றுக்கள் சுழலும் போது செலவாகும் காலம் எவ்வளவு? ……

➢ பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து சிட்டையைப் பூரணப்படுத்துக.

விலைப்பட்டியல்			
கருவாடு	1 kg	ரூ 875	00
சவர்க்காரம்	1 கட்டி	ரூ 45	00
கோதுமை மா	1 kg	ரூ 95	00
பால்மா	1 பக்கற்	ரூ 43	00

சிட்டை			
பொருள்	வாங்கிய அளவு	பெறுமதி	
பால்மா	1 பக்கற்	430	00
கருவாடு	500 g	.....	.....
சவர்க்காரம்	.....	90	00
மொத்தப் பணம்		957	50

25. ஒரு லீற்றர் 500 மில்லி லீற்றர் கொடித்தோடைப் பழச்சாற்றுடன் 4 லீற்றர் 750 மில்லி லீற்றர் நீர் சேர்க்கப்பட்டு பழப்பானம் தயாரிக்கப்பட்டது. அப்பழப்பானத்தின் அளவு யாது?

……. லீற்றர் ……. மில்லி லீற்றர்

26. 5kg அரிசிப் பையொன்றிலிருந்து 2kg 300g அரிசி எடுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய அரிசியின் நிறை யாது?


……. kg ……. g

27. இரு நண்பர்களில் ஒருவரிடம் 3m நீளமுள்ள நாடாவும் மற்றைய நண்பரிடம் 1m 75cm நீளமுள்ள நாடாவும் உள்ளன. இருவரிடமும் உள்ள நாடாக்களின் நீளங்களின் வித்தியாசம் எவ்வளவு?


……. m ……. cm

www.ikedu.lk

28. கீழே தரப்பட்டுள்ள கட்டவலையினுள் பக்கமொன்றின் நீளம் 4 கட்டங்களாலான சதுரமொன்றை பென்சிலால் அல்லது பேனையால் வரையுங்கள்.



29. தரம் 5 வகுப்பறையொன்றில் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவரும், 1 தொடக்கம் 6 வரையான எண்கள் இடப்பட்ட தாயக்கட்டையை ஒரு தடவை உருட்டி பெறப்பட்ட எண்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

(ii) தாயக்கட்டையில் மிகவும் கூடுதலாக விழுந்த எண் யாது? .....

❖ **30 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. தாவர உணவு, மாமிச உணவு இரண்டையும் உணவாகக் கொள்ளும் விலங்குகளை எவ்வாறு அழைப்பர்?

1. அனைத்தும் உண்ணி
2. தாவர உண்ணி
3. மாமிச உண்ணி

31. மீனிலிருந்து கருவாடு தயாரிக்கும் செயற்பாடு இடம்பெறும் முறையைக் காட்டுவது.

1. சூரிய ஒளி மூலம் கிடைக்கும் வெப்பத்தினால் நீர் ஆவியாதல்.
2. மீனைக் குளிரூட்டியில் வைத்துப் பாதுகாத்தல்.
3. சூரிய ஒளி மூலம் கிடைக்கும் வெப்பத்தினால் நீர் பனிக்கட்டியாதல்.

32. வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடும் பழக்கமானது.

1. நல் மாணாக்களின் பண்பு.
2. நூலகத்தில் செய்யக்கூடிய செயல்.
3. நூலகத்தில் செய்யக்கூடாத செயல்.

33. 'வாகனத்தை நிறுத்துக' எனும் சந்தர்ப்பத்தில் வீதிச்சமிக்ஞை விளக்குகளில் எந்த நிறம் ஒளிரும்.

1. மஞ்சள்
2. சிவப்பு
3. பச்சை

34. தீக்குவியல் மூட்டலும் தொலைபேசியைப் பயன்படுத்தலும் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் முறைகளாகும். இவை எக் காலங்களுக்குப் பொருத்தமானவை.

1. ஆதிகாலம், நவீனகாலம்
2. நவீனகாலம், ஆதிகாலம்
3. தற்காலம், பழையகாலம்

35. துவிச்சக்கரவண்டியை இலகுவாக ஓட்டிச் செல்வதற்கு உதவுபவை.

1. சேலுதடக்கி
2. தைனமோ
3. பற்சில்லுகளும் சங்கிலித்தொகுதியும்

www.lkedu.lk

36. இலங்கையின் மூன்று மாகாணங்களாகக் கருதப்படுபவை.

1. கொழும்பு, திருகோணமலை, ஊவா
2. வடக்கு, வடமேற்கு, சப்ரகமுவ
3. கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு

37. 

இவ்விரண்டு சட்டக்காந்தங்களின் முனைகளை ஒன்றுக்கொன்று கிட்டக்கொண்டு செல்லும் போது யாது நிகழும்?

1. ஒன்றையொன்று தள்ளும் 2. ஒன்றையொன்று கவரும் 3. எதுவும் நடைபெறமாட்டாது.

38. பாதணிகளில் உள்ள கிருமிகள் வீட்டினுள்ளே நுழைவதைத் தவிர்ப்பதற்குச் செய்யவேண்டிய சுகாதாரப் பழக்கவழக்கமாக அமைவது.

1. பாதணியுடன் வீட்டினுள் நுழைதல்.
2. பாதணிகளைக் கழற்றிய பின் வீட்டினுள் நுழைதல்.
3. வெளியிலும் பாதணி அணியாதிருத்தல்.

39. காட்டில் உலாவும் போது செல்லவேண்டிய திசையைக் கண்டறிவதற்குப் பயன்படுத்துவது.

1. திசைக்காட்டி 2. காற்று வேகமானி 3. வெப்பமானி

40. சோறு எமது உடலில் எத் தொழிலைச் செய்கின்றது.

1. உடலை வளர்த்தல்.
2. சக்தியைக் கொடுத்தல்.
3. உடலைப் பாதுகாத்தல்.

41. தானியப் பயிர்வகைக்குரிய பயறு எதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

1. வற்றாளை 2. பூசணிக்காய் 3. பருப்பு

42. பயிர்களின் மகரந்தச்சேர்க்கைக்கு உதவும் விலங்கு எது?

1. தேனீ 2. மயிர்க்கொட்டி 3. தந்துவெட்டி

43. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்று.

1. பல்லாங்குழி 2. சதுரங்கம் 3. தாயம் போடுதல்

44. காட்டுக்கோழியையும், கருங்குரங்கையும் ஒழுங்குமுறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

1. இலங்கைக்கே உரித்தான பறவையும், நகருயிரும்
2. இலங்கைக்கே உரித்தான பறவையும், முலையூட்டியும்
3. இலங்கைக்கே உரித்தான முலையூட்டியும், பறவையும்

45. வித்துக்கள் மூலம் கன்றுகளைப் பெறக்கூடிய தாவரம் எது?

1. மரவள்ளி 2. கரும்பு 3. கத்தரி

46. இலங்கை நாட்டிற்கே உரித்தான தாவரம் எது?

1. பெரும்பிரம்பு 2. தேக்கு 3. பலா

47. சிகிரியா எதற்குப் பிரசித்தி பெற்ற இடமாகும்.

1. சுவரோவியம் 2. மரச்செதுக்கல் 3. நீர்வீழ்ச்சி

48. எமது உடலில் கழிச்சல் நோயினை ஏற்படுத்தும் பிராணி எது?

1. ஈ 2. நுளம்பு 3. நாய்

49. முலையூட்டி வகைப் பிராணிகள் மாத்திரம் அடங்கியுள்ள தொகுதி எது?

1. மரங்கொத்தி, மயில், மாடு
2. ஆமை, புலி, கரடி
3. மாடு, ஆடு, புலி

www.lkedu.lk

50. இலங்கையிலுள்ள ஒரு நீர்வீழ்ச்சியும் ஒரு மலையும் முறையே அமைந்த விடை யாது?

1. தியலுமை, கிரிசல்பொத்தை
2. கிரிசல்பொத்தை, மகாவலிகங்கை
3. சிவனொளிபாதமலை, களுகங்கை

51. இலங்கையின் பண்டைய வரலாற்றுடன் தொடர்புடைய மரபுரிமையைக் கொள்ளத்தக்கது.

1. ஓவியங்கள் 2. சிற்பங்கள் 3. திரிபீடகம்

52. எத்தூளினை நீரில் இட்டால் அத்தூள் ஊதா நிறமாக மாறும்.

1. நீலத்தூள் 2. கொண்டிசுத்தூள் 3. மிளகாய்த்தூள்

53. எலுமிச்சம்பழத்தை நீண்டகாலம் வைத்திருக்கக்கூடிய முறை யாது?

1. ஊறுகாய் போடுதல் 2. புகையூட்டல் 3. தேனில் அமிழ்த்துதல்

54. பாரமான பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் பொருள்களைத் துண்டுகளாக்குவதற்கும் பயன்படும் உபகரணங்கள் முறையே எவை?

1. சில்லுவண்டி, பாக்குவெட்டி
2. சுத்தியல், மூடிதிறப்பான்
3. சில்லுவண்டி, மூடிதிறப்பான்

55. படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?



1. கவனமாகக் கையாளுங்கள்
2. மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடியது
3. நொருங்கக்கூடியது.

56. அரச இலச்சினையில் உள்ள குறியீடுகளில் அடங்காதது.

1. நிறைகுடம் 2. அரசிலை 3. தர்மச்சக்கரம்

57. முசுறு (செவ்வெறும்பு) தாவரத்திலுள்ள எப்பகுதியைக் கொண்டு கூடு அமைத்துக் கொள்ளும் பிராணி ஆகும்.

1. இலைகள் 2. பூக்கள் 3. தண்டுகள்

58. கட்புல செவிப்புலன் மூலம் தகவல்களைப் பெறக்கூடிய தொடர்பாடல் சாதனம் எது?

1. செய்திப்பத்திரிக்கை 2. தொலைக்காட்சி 3. வானொலி

59. திருகாணி கழற்றுவதற்குப் பொருத்தமான உபகரணம் எது?

1. சுத்தியல் 2. திருகாணிசெலுத்தி 3. உளி

60. தெறியோட்டைத் தைப்பதற்குப் பயன்படுத்தப்படும் தையல் முறை யாது?

1. சங்கிலித்தையல் 2. மீன்முள்ளுத்தையல் 3. கம்பளித்தையல்

www.ikedu.lk